சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். குற்றம் ருசுவாக இடமிருந்தால் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க போலீசார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

கீர்—சிங்கங்கள்

* 85 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகக் காட்டில், கீர் (Gir) பிரதேசத்திலிருந்து கொண்டு வந்த சிங்கங்களை வளர்ப்பதாக முடிவு செய்யப்பட்டதா?

(இ) எவ்வளவு சிங்கங்களை வளர்க்க உத்தேசம்?

கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) நாட்டில் நிலவிவரும் நெருக்கடியின் காரணமாக, இந்த திட்டத்தை நிறுத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

Rajaji Reservoir

* 86 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there was any proposal to construct a reservoir by name Rajaji Reservoir near Pottappatti, Melur taluk, Madurai district across the Palar river; and

(*b*) the estimated cost therefor?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The proposal to construct a reservoir near Pottappatti was examined and found to be not feasible, in view of the meagre supply available.

திரு. எஸ். மாதவன்: கனம் தலைவர் அவர்களே, 1952-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது. பாலாற்றுப் பிரதேசம் முழுவதுக்கும் அது பயன்படுமாதலால் அதை மீண்டும் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போதுள்ள நிலைமையில் அதைப் பரிசீலனை செய்து அதனால் கிடைக்கக்கூடிய பலனைவிடச் செலவு அதிகமாகவே இருக்கும் என்பதால் அது கைவிடப்பட்டது. கைவிடப்பட்டது என்ற காரணத்தினால் மீண்டும் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளப்படாது என்று சொல்வதற்கில்லை. அதனால் அதிகப் பயன்பெற வசதி ஏற்படும் என்றால் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர்: தண்ணீர் இல்லாத ஆற்றுக்குப் போடப்படும் திட்டத்திற்கு ராஜாஜி நீர்த்தேக்கம் எனப் பெயர் வைக்கக் காரணம் என்ன?

(பதில் இல்லை.)

28th February 1963]

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதாக இருந்தால் ராஜாஜி நீர்த்தேக்கம் என்ற பெயரை மாற்றி "காமராஜ் நீர்த் தேக்கம்" என்று பெயர் வைப்பார்களா ?

(பதில் இல்லை.)

விளம்பரங்களில் ஜாதி, மதப் பெயர்கள்

* 87 கேள்வி.—திரு முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொதுவாக உள்ள கடை விளம்பரங்களிலிருந்து ஜாதி, மதப் பெயர்களை நீக்குமாறு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இதனால் இன்னும் வகுப்பு வாதம், சாதி பேதம் உருவாகிவரும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அதைத் தடுக்க உருவான முறையில் சட்டம் கொண்டுவர முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் வைக்கிற கடைகளுக்கு அவரவர்கள் இஷ்டப்படி பெயர் வைத்துக்கொள்கிறார்கள். இப்படித்தான் பெயர் வைக்கவேண்டுமென்று கட்டுப்படுத்துவது முறை அல்ல.

திரு. இரா. நல்லமுத்து : சில ஊர்களுக்கு சாதியின் பெயர்களை வைக்கிறார்களே, அதை மாற்ற அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுஸ்தாபனங்களுக்கு சாதியின் பெயரை வைப்பதாக இருந்தால் அதை இப்போது அரசாங்கம் அனுமதிப்பது இல்லை.

Ex-District Board, Salem

* 88 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken possession of the immovable properties such as buildings of the Ex-District Board, Salem ;

(*b*) if so, the number of buildings that have been taken over by the Government in the North Salem district and the value of the buildings;

(*c*) whether the Government have to clear any liabilities of the Ex-District Board in North Salem district ; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) (i) Thirteen.

(ii) Rs. 1,09,357.

(*c*) Yes.